# ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி) - மதுரை

## உடற்கல்வித்துறை - ஆண்டறிக்கை

நமது கல்லூரி விளையாட்டுக்குழு, கல்லூரி முதல்வர், முனைவர். (திருமதி). சூ.வானதி அவர்களைத் தலைவராகவும், உடற்கல்வி இயக்குநர் முனைவர்.(திரு). செ.ரமேஷ் அவர்களை செயலாளராகவும், திரு. க. அருள்ராஜ் நிதியாளர், பேராசிரியர் (திருமதி). எம்.முத்துராணி, பேராசிரியர் (திருமதி). வ.சூரியகாந்தி, பேராசிரியர் (திருமதி). பூ.சாந்தி, பேராசிரியர் (திருமதி). ஜெ.ஜெயகுமாரி ஞான தீபா, பேராசிரியர் (திருமதி). அ.பியூலா மேரி, பேராசிரியர் (திருமதி). ஆர்.எ.லதாதேவி ஆகியோர்களை விளையாட்டுக்குழு உறுப்பினர்களாகவும் மற்றும் குறியீட்டாளர் (திரு).ம.முத்து முரளி குமார் என்பாரை துறைப் பணியாளராகவும், மூன்றாம் ஆண்டு புவியியல் துறை மாணவி செல்வி. சி. சாருமதி ஐ மாணவச் செயலாளராகவும் கொண்டு வெற்றிக் கோப்பைகளை வென்று வந்தது.

இக்கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவியர் சேர்க்கையின் போது விளையாட்டில் தனித்திறமை பெற்ற மாணவியருக்கு முன்னுரிமை அளித்து சிறப்பு இட ஒதுக்கீட்டின்படி இளங்கலை / இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கு 3% விழுக்காடு ஒதுக்கீடும், முதுகலை / முதுஅறிவியல் பாடப்பிரிவிற்கு 2% விழுக்காடு ஒதுக்கீடும் வழங்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் மாணவியர் சேர்க்கப்பட்டனர்.

இந்த கல்வி ஆண்டில் நமது மாணவியர்கள் பல்கலைக்கழக அளவிலும், மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளிலும் பங்கேற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்து முத்திரை பதித்துள்ளனர்.

### பல்கலைக்கழக அளவில்

மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டக் கல்லூரிகள் கலந்து கொண்ட மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் நீச்சல் போட்டியில் நமது கல்லூரியின் சார்பாக கலந்து கொண்டு பரிசு பெற்ற நிகழ்வு, பிற அரசுக் கல்லூரிகளுக்கும் ஊக்கத்தை அளிப்பதாக அனைவரும் வியந்து பாராட்டினர்.

குறிப்பாக முதுகலை முதலாம் ஆண்டு தமிழ் பயிலும் ஆர்.இளையநிலா என்ற மாணவி 100 மீட்டர் பட்டர்பிளை பிரிவில் வெண்கலப் பதக்கம் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவி எஸ்.காயத்ரி 50 மீட்டர் ப்ரெஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் குழுப்பிரிவான 4 X 50 mts ப்ரீஸ்டைல் ரிலே நீச்சல் போட்டியில் எஸ்.திவ்யா, எஸ்.காயத்ரி, எம்.சிவகாமி, ஆர்.இளையநிலா ஆகிய நான்கு மாணவிகளைக் கொண்ட அணி மூன்றாமிடம் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான வாள்சண்டை போட்டி பல்கலைக்கழகத்தின் உள்ளரங்கில் நடைபெற்றது. இப்போட்டியின் தனி நபர் பிரிவில் மூன்றாம் ஆண்டு கணிதவியல் பிரிவு மாணவி பி.கார்த்திகா என்பார் **சேபர் பிரிவில்** வெள்ளிப் பதக்கமும் முதலாம் ஆண்டு பொருளியல் பிரிவு மாணவி கே.மகாலட்சுமி என்பார் **எபி பிரிவில்** வெண்கலப் பதக்கமும் மற்றும் முதலாம் ஆண்டு ஆங்கிலம் பயிலும் மாணவி எம்.அனுசியா என்பார் **பாயில் பிரிவில்** வெண்கலப் பதக்கம் பெற்றதும் நமது கல்லூரிக்கு பெருமைக்குரிய நிகழ்வாகும்.

**இதே போட்டியின் குழுப்பிரிவில்**
இளங்கலை முதலாம் ஆண்டு பொருளாதாரம் மாணவி கே.மகாலட்சுமி
இளமறிவியல் மூன்றாம் ஆண்டு கணிதவியல் மாணவி ஆர்.அபர்ணா
இளமறிவியல் முதலாம் ஆண்டு புவியியல் மாணவி ஆர்.சிந்து
இளங்கலை மூன்றாம் ஆண்டு வரலாறு மாணவி பி.நாகஜோதி ஆகிய நான்கு பேர் கொண்ட அணி **எபி பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும்**

இளமறிவியல் மூன்றாம் ஆண்டு கணிதவியல் மாணவி பி.கார்த்திகா
இளங்கலை முதலாம் ஆண்டு ஆங்கிலம் பயிலும் மாணவி எம்.அனுசியா
இளங்கலை முதலாம் ஆண்டு பொருளாதாரம் மாணவி டி.பூர்ணிமா
இளமறிவியல் மூன்றாம் ஆண்டு கணிதவியல் மாணவி கே.அப்ரின்பானு ஆகிய நான்கு பேர் கொண்ட **அணி பாயில் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும்**

முதலாம் ஆண்டு கணினிப் பயன்பாடு மாணவி ஆர்.ஆர்.எம்.சஷ்மிதாஸ்ரீ
இளங்கலை முதலாம் ஆண்டு பொருளாதாரம் மாணவி எஸ்.பிருந்தாதேவி
முதலாம் ஆண்டு கணினிப் பயன்பாடு மாணவி எம்.தமிழரசி
இளமறிவியல் மூன்றாம் ஆண்டு புவியியல் மாணவி சி.சாருமதி ஆகிய நான்கு பேர் கொண்ட அணி **சேபர் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும்** பெற்று முத்திரை பதித்து நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளங்கலை மூன்றாம் ஆண்டு ஆங்கிலம் பயிலும் ஜி.தீபிகா என்ற மாணவி மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் **பூப்பந்து அணிக்கு "ஸ்டேன்ட்-பை"** ஆக தேர்வு பெற்றது நமது மாணவிகளின் சிறந்த திறமையை வெளிப்படுத்துகிறது.

## மாநில அளவில்

தமிழ்நாடு இயற்கை வைத்திய சங்கத்தினரால் திருப்பாலை யாதவா கல்லூரியில் நடத்தப்பட்ட மாநில அளவிலான யோகாசனப் போட்டியில் நமது கல்லூரியைச் சேர்ந்த **மூன்றாம் ஆண்டு புவியியல் பயிலும் க.நிறைமதி** என்ற மாணவி தனி நபர் பிரிவில் முதலிடம் பெற்றதோடு சாம்பியன் பட்டத்தையும் வென்றது நமது கல்லூரிக்கு மிகவும் பெருமைக்குரிய நிகழ்வாகும். மேலும் இதே போட்டியில் நமது கல்லூரியில் **முதலாம் ஆண்டு பயிலும் க.கிருஷ்ணவேணி** என்ற மாணவியும் தனி நபர் பிரிவில் முதலிடம் பெற்றுள்ளார் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினரால் மதுரையில் நடத்தப்பட்ட மாநில அளவிலான தடகளப் போட்டியில் நமது கல்லூரியைச் சேர்ந்த **இளங்கலை இரண்டாம் ஆண்டு இயற்பியல் பயிலும் பி.ரூபா என்ற மாணவி ஈட்டி எறிதல் பிரிவில்** கலந்து கொண்டு நான்காமிடம் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மதுரை காமராஜர் பல்கலை உள்ளரங்கில் நடத்தப்பட்ட மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் நமது கல்லூரியைச் சேர்ந்த **இளங்கலை மூன்றாம் ஆண்டு பொருளாதாரம் பயிலும் கே.ஜான்சி என்ற மாணவி (19 - 24** வயது பிரிவில்) தங்கப் பதக்கத்தையும், **இளங்கலை முதலாம் ஆண்டு விலங்கியல் பயிலும் எம்.சரிதா என்ற மாணவி** (15 - 18 வயது பிரிவில்) தங்கப் பதக்கத்தையும், **இளங்கலை இரண்டாம் ஆண்டு விலங்கியல் பயிலும் எஸ்.சௌமியா என்ற மாணவி** (19 - 24 வயது பிரிவில்) வெண்கலப் பதக்கத்தையும் பெற்று முத்திரை பதித்து நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்ட கபாடி கழகம் நடத்திய மாநில போட்டிக்கான தெரிவுப் போட்டியில் **இளங்கலை இரண்டாம் ஆண்டு பயிலும் ஏ.ஜோதிகா என்ற மாணவி** தேர்வு செய்யப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் நடைபெற்ற மாநிலப் போட்டியில்

கலந்து கொண்டது நமது கல்லூரிக்கு மிகவும் பெருமை சேர்ப்பதாக அமைந்தது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாவட்ட அளவில்

முதலமைச்சர் கோப்பைக்கான கபாடிப் போட்டியில் நமது கல்லூரியின் கபாடி மற்றும் கையுந்துப்பந்து அணி நான்காமிடம் பெற்றுள்ளனர். முதலமைச்சர் கோப்பைக்கான தடகளப் போட்டியில் **இரண்டாம் ஆண்டு இயற்பியல் பயிலும் பி.ரூபா என்ற மாணவி ஹேமர் த்ரோ பிரிவில்** கலந்து கொண்டு மூன்றாம் இடத்தையும் **இரண்டாம் ஆண்டு பொருளியல் பயிலும் சி.ஜனனி என்ற மாணவி 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில்** மூன்றாம் இடத்தையும் பெற்று இருவருக்கும் ரூபாய் 500/- க்கான சிறப்பு பரிசையும் பெற்றுள்ளனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விளையாட்டில் தனித்திறன் கொண்ட மாணவிகளை ஊக்கப்படுத்தும் விதமாகவும் மற்றும் ஒவ்வொரு மாணவிருக்கும் முக்கியத்துவம் அளிக்கும் நோக்கிலும்** அதிக எண்ணிக்கையில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டு போட்டிகளில் குறிப்பாக கபாடி, கையுந்துப்பந்து, பூப்பந்து, இறகுப்பந்து, கோ-கோ, கால்பந்து, சதுரங்கம், **மேசைப்பந்து, கூடைப்பந்து,** நீச்சல், தடகளம் ஆகிய 11 போட்டிகளில் நமது கல்லூரியின் சார்பாக அதிக அணிகள் கலந்து கொண்டு விளையாடியுள்ளனர் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது கல்லூரியில் நடத்தப்பட்ட **"மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தின"** நடை போட்டியில் துறைக்கு மூன்று மாணவியர் வீதம் மொத்தம் 45 பேர் கலந்து கொண்டனர். இப்போட்டியில் இளங்கலை மூன்றாம் ஆண்டு விலங்கியல் பயிலும் மாணவி **கே.கல்பனா முதலிடத்தையும்**, இளமறிவியல் மூன்றாம் ஆண்டு பொருளியல் பயிலும் மாணவி **பி.மாயக்கனி இரண்டாமிடத்தையும்** மற்றும் மூன்றாம் ஆண்டு பொருளியல் பயிலும் மாணவி **கே.முத்துமாரி மூன்றாமிடத்தையும்** பெற்றுள்ளனர் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாணவியர்களிடையே ஆரோக்கியம் சார்ந்த விழிப்புணர்வை தங்கள் வாழ் நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கில் அவர்களை மாரத்தான் போட்டிகளில் பங்கேற்பதற்கு சிறப்பு அனுமதி அளித்து வழிகாட்டியதன் பயனாக**

மதுரை மாவட்ட காவல்துறையின் சார்பாக நடத்தப்பட்ட**"காவல் துறை ஈகியர் (தியாகிகள்) தின ஞாபகார்த்த போட்டி"** (5 கி.மீ. ஓட்டம்) போட்டியில் நமது கல்லூரி மாணவியர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு சிறப்பித்ததற்காக மாநகர காவல்துறையிடம் சிறப்பு பரிசு பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும் மதுரை தேவதாஸ் மருத்துவமனை நிர்வாகத்தினரால் மருத்துவம் மற்றும் உடல் நலம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட **10.5 கி.மீ. மாரத்தான்** போட்டியில் நமது கல்லூரி மாணவியர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு **இந்திய செஞ்சிலுவை சங்கம்** மற்றும் என்.டி.ஆர். வைகை கிளப் இணைந்து நடத்திய **மினி மாரத்தான்** போட்டியில் நமது கல்லூாயில் **இளங்கலை இரண்டாம் ஆண்டு புவியியல் பயிலும் கே.பரமேஸ்வரி** என்ற மாணவி மூன்றாமிடத்தை பிடித்து **வெண்கலப் பதக்கத்ததை** வென்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்லூரி அளவில்

**மதிலகப் போட்டியின் முக்கிய நோக்கமாக கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவியர்களும் விளையாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்பை வழங்குவதற்காக பல்வேறு**

**பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டது. குறிப்பாக மாற்றுத்திறன் மாணவிகளுக்கும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.**

**இளங்கலை மாணவியருக்கான குழுப் பிரிவில்** 13 போட்டிகளும்

**இளங்கலை மாணவியருக்கான தடகளப் பிரிவில்:** 9 போட்டிகளும் நடத்தப்பட்டது.

**முதுகலை மாணவியருக்கான குழுப் பிரிவில்:** 4 போட்டிகளும்

**முதுகலை மாணவியருக்கான தடகளப் பிரிவில்:** 8 போட்டிகளும் நடத்தப்பட்டது.

**இளங்கலை மாற்றுத்திறன் மாணவியருக்கான பிரிவில்:** 6 போட்டிகளும்

**இளங்கலை பார்வைத்திறன் குறைந்த மாணவியர் பிரிவில்:** 4 போட்டிகளும் நடத்தப்பட்டது.

**கல்லூரி விளையாட்டு விழா**

28.02.2020 அன்று கல்லூரி முதல்வர், முனைவர். திருமதி. சூ.வானதி அவர்கள் தலைமையேற்று ஒலிம்பிக் கொடியேற்றினார். வணிகவியல் துறைத்தலைவர் திருமதி.கா.ஞானேஸ்வரி அவர்கள் கல்லூரிக் கொடியேற்றினார். சிறப்பு விருந்தினர் திரு.ந.லெனின், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மதுரை அவர்கள் தேசியக் கொடியேற்றி அணிவகுப்பு மரியாதை ஏற்று மாணவிகளுக்கு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினர். முதல்வர் அவர்கள் கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கும், பேராசிரியர்களுக்கும் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

கல்லூரியின் மதிலகப் போட்டியில் இரண்டாம் ஆண்டு புவியியல் துறை பயிலும் கே.பரமேஸ்வரி மற்றும் இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை பயிலும் பி.ரூபா ஆகியோர் இளங்கலை பிரிவில் சாம்பியன் பட்டம் பெற்றனர்.

முதுகலை பிரிவில் முதலாம் ஆண்டு வணிகவியல் பயிலும் யு.முத்துலெட்சுமி என்ற மாணவி சாம்பியன் பட்டம் பெற்றார்.

முனைவர்.செ.ரமேஷ் உடற்கல்வி இயக்குநர் உடற்கல்வித்துறை ஆண்டறிக்கையை வாசிக்கவும் மாணவச் செயலர் மூன்றாம் ஆண்டு புவியியல் துறை மாணவி சி.சாருமதி நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவடைந்தது.